**சிவகங்கை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(07-11-2015 – 11-11-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 06-11-2015

**கடந்த கால வானிலை 03-11-2015 முதல் 05-11-2015 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 53.3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23 |
| மேக மூட்டம் | 4-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 63-87 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 3-6 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 11-11-2015 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 07.11.15 | 08.11.15 | 09.11.15 | 10.11.15 | 11.11.15 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 10 | 12 | 10 | 8 | 2 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33 | 33 | 33 | 34 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 87 | 87 | 87 | 85 | 84 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 76 | 76 | 76 | 72 | 70 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி:**

வரும் ஐந்து நாட்களுக்கு லேசான மற்றும் மிதமான மழை அனைத்து இடங்களிலும் வர வாய்ப்புள்ளது. வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்தும் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், எள்ளு, பருப்பு வகைகள் மற்றும் கரும்பு**
**பருவம்: நெல்- தூர் கட்டும் நிலை, எள்ளு- வளர்ச்சி பருவம்**

- சொட்டுநிர் பாசனம் மேற்கொள்வதன் மூலம் நீர்த்தேவைகளைக் குறைக்கலாம்.
- நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிபாஸ் 20 இ.சி. 500மி.லி. / ஏக்கர் அல்லது புரபனோபாஸ் 50 இ.சி. ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.
- நெல் பயிரைத் தாக்கும் மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணை 2% அல்லது வேப்பங்கொட்டை சாறு 5% அல்லது தையோமீத்தாகசம் 25 WG லிட்டருக்கு 0.6 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.
- விவசாயிகளுக்கு கடலையில் காணப்படும் இலைப்புள்ளியினைக் கட்டுப்படுத்த carbendazim 1ml/lit or mancozeb or chlorothalonil 2ml/lit தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.